முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

M.C.O.P. No.135/2022

2026–ம் வருடம் ஜனவரி மாதம் 19–ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

பெயர்: திரு. செல்வராஜ் (ம.சா.1) தொழில்:

த/பெ: இனம்:

கிராமம்: வயது:

மாவட்டம்: நாள்: 19–01–2026

முதல் விசாரணை:

சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது.

| வ. எண். | தேதி | ஆவணம் | ஆவணத் தன்மை | குறியீட்டு எண் |
|---|---|---|---|---|
| 1 | --- | குற்ற எண்.69/22 முதல் தகவல் அறிக்கை | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.1 |
| 2 | --- | விபத்து பதிவேடு | அசல் | ம.சா.ஆ.2 |
| 3 | --- | காயச்சான்று | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.3 |
| 4 | --- | மாதிரி வரைபடம் | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.4 |
| 5 | --- | பார்வை மகசர் | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.5 |
| 6 | --- | Ka 01 AL 5888க்கான மோ.வா. ஆய்வறிக்கை | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.6 |
| 7 | --- | இறுதி அறிக்கை | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.7 |
| 8 | 24.02.2022 | டிஸ்சார்ஜ் சம்மரி | அசல் | ம.சா.ஆ.8 |
| 9 | --- | மருத்துவ பில்கள் (9) | அசல் | ம.சா.ஆ.9 |
| 10 | --- | எஸ் கே பார்மசி பில்கள் | அசல் | ம.சா.ஆ.10 |
| 11 | --- | மனுதாரரின் ஆதார் அட்டை | ஒப்பிட்டு நகல் | ம.சா.ஆ.11 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | --- | மனுதாரரின் வங்கி புத்தக்கத்தின் முதல் பக்கம் | ஒப்பிட்டு நகல் | ம.சா.ஆ.12 |
| 13 | --- | மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் | ஒப்பிட்டு நகல் | ம.சா.ஆ.13 |
| 14 | --- | 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் | நகல் | ம.சா.ஆ.14 |

மனுப்படி உத்தரவாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கை, மாதிரி வரைபடம், இறுதி அறிக்கை மற்றும் நிரூபணவாக்குமூலத்தின் அடிப்படையில் விபத்திற்கு காரணம் KA 01 AL 5888 வாகனம் தான் காரணம் என்றால் சரிதான். விபத்தினை ஏற்படுத்திய வாகனத்தின் காப்பீட்டாளர் தான் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான். மனு மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த மேற்படி லாரியின் கவனக்குறைவுதான் காரணம் என்றும், அந்த வாகனம் 3ம் எதிர்மனுதாரருடன் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 4ம் எதிர்மனுதாரர் என்னுடைய வாகனத்தின் காப்பீட்டாளர் என்பதால் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 4ம் எதிர்மனுதாரரை பொறுத்தவரை நான் 3ம் தரப்பினர் என்றால் சரிதான். 4ம் எதிர்மனுதாரரிடமிருந்து நான் எவ்வித இழப்பீடு கோரவில்லை என்றால் சரிதான். 4ம் எதிர்மனுதாரரிடமிருந்து எவ்வித இழப்பீடும் கோராதநிலையில் எனவே அவரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. என்னுடைய காப்பீடு மற்றும் பதிவு சான்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

ஒம்./–K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.